# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:114:2016 நாள்: 09.02.2016

அன்பார்ந்த தோழர்களே,

## சங்கத்தின் இணையதளம்

நாம் தகவல் தொழில்நுட்பத்தில் மிகவும் உயரிய ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். அனைத்து துறைகளிலும் இன்று மிகப்பெரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில், நாம் நமது தகவல் தொடர்பில் முன்னேற்றங்களை கொண்டுவருவதன் மூலமே, இன்றைய இளைய தலைமுறையை நாம் விரைவாக அணுகவியலும்.

இந்த அடிப்படையில், நமது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் ஆகியவை இணைய தளங்களை ஏற்படுத்தி சிறப்பான தகவல் தொடர்பைப் பராமரித்துவருகின்றன. அந்த வகையில், நமது சங்கத்திற்கு என்று தனியாக ஒரு இணைய தளம் வேண்டும் என்ற ஆர்வத்தில், சங்கத்திற்காக ஒரு இணைய தளம் துவங்கப்பட்டுள்ளது.

நமது சங்கத்தின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களுக்காக "**வங்கி ஊழியர் ஊதியம், பணிவரன்முறைகள்**" குறித்து சென்னையில் பிப்ரவரி 7, 8 தேதிகளில் ஒரு தொழிற்சங்கப் பயிலரங்கு நடத்தப்பட்டு, பல தோழர்கள் பயிற்சி பெற்றனர். அந்தப் பயிலரங்கின் முடிவில், நமது சங்கத்தின் இணையதளம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் துணைத்தலைவர் தோழியர்.**B.விஜயாள்** அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

## இணையதள முகவரி : **www.bankubeutn.in**

நமது சங்கத்தின் இணைப்பொருளாளர் தோழர்.**S.சுரேஷ்** அவர்களால் முழுமையாக வடிவமைக்கப்பட்டு, இந்த இணையதளம் இன்று நமது தோழர்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதற்காக தனது நேரத்தையும், உழைப்பையும் நல்கிய தோழருக்கும், அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய அவரது குடும்பத்தாருக்கும், நமது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல இயக்கங்கள் இணையதளங்களை வெகு விமரிசையாக துவக்கி வைக்கின்றன. இருப்பினும் அதிலுள்ள தகவல்கள் புதுப்பிக்கப்படாமல் விடப்படுவதால், அவை பயனற்றுப்போகின்றன. அதன் காரணமாக, யாரும் அந்த இணையதளத்தை அணுகுவதும் இல்லை. அதுபோலில்லாமல், நமது சங்கத்தின் இணைய தளத்தில் உடனடியாக சங்கம் பற்றிய செய்திகள், தகவல்கள், சுற்றறிக்கைகளைப் பதிவிட தோழர்.**S.சுரேஷ்** அவர்கள் தனது முழுமையான பங்களிப்பை வழங்கவுள்ளார் என்ற செய்தியை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர்கள் இந்த இணையதளத்தின் மூலம் சங்கம் தொடர்பான அனைத்து விவரங்களையும் உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம். நமது தோழர்கள் அனைவரும் தங்கள் முழுமையான ஆதரவினை வழங்கி, இந்த முயற்சி வெற்றிபெற்றிட துணை நிற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்கினால், இந்த இணைய தளத்தை மேலும் பொலிவுபெறச்செய்ய இயலும். தோழர்கள் "Google Chrome" மூலம் இந்த தளத்தை நல்ல முறையில் காணலாம்.

உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சங்கத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## வருடாந்திர உடல் பரிசோதனை
## (Master Health Check-up)

நமது வங்கி வழங்கும் நலத்திட்டத்தின் மூலம் உடல் பரிசோதனை செய்துகொள்ள இந்த நிதி ஆண்டிற்கான கடைசி நாள் 31.03.2016. எனவே, நமது தோழர்கள், கடைசி நிமிடம் வரை காத்திருக்காமல், உடனடியாக தங்கள் உடல் பரிசோதனையைச் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| ஆண்கள் 40 வயதுக்குமேல் | ரூ.1,000/- |
| ஆண்கள் 45 வயதுக்குமேல் | ரூ.1,900/- |
| பெண்கள் 40 வயதுக்குமேள் | ரூ.1,700/- |